**வரையறுக்கப்பட்ட லங்கா கப்பல் கூட்டுத்தாபனம் -2015**

**----------------------------------------------------------------------------------------------------------**

வரையறுக்கப்பட்ட லங்கா கப்பல் கூட்டுத்தாபனத்தின் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வை மேற்கொள்வதற்காக பகிரங்க தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது. விரிவான அறிக்கையொன்று கம்பனியின் தலைவருக்கு 2016 யூன் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

**-----------------------------------------------------------------------------------------------**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

**-------------------------------------------**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில்

கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனி உருவாக்கமும் உரிமையும்

1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புக்களால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக வ/ப லங்கா கப்பல் கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அரசாங்கத்திற்குரிய வியாபாரங்களை பொதுக் கம்பனியாக நியமித்தல் 1987 இன் 23 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தினாலும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தினாலும் இக்கம்பனி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியொன்றாக இருந்ததுடன் அதன் பங்கு உரிமைத் தன்மை முழுமையாக பொதுத் திறைசேரிக்குச் சொந்தமாகக் காணப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட லங்கா கப்பல் கூட்டுத்தாபனத்தின் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு

நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 துணைக் கம்பனியைக் கலைத்தல்

நிறுவனத்தின் துணைக் கம்பனியொன்றான சிலோன் சிப்பிங் ஏஜன்சி (தனியார்) கம்பனி 2006 மார்ச் 20 ஆந் திகதிய நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளைக் இடைநிறுத்தி கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையிலும் கலைத்தல் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

### 2.2.2 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

**இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39**

04 வருடங்கள் முதல் 37 வருடங்கள் வரையிலான நீண்ட கால வீச்சில் கம்பனிக்கு அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட வங்கி பிணை வைப்பு, பாதுகாப்பு வைப்பு மற்றும் மூன்று முற்பணக் கணக்குகளின் கூட்டுத்தொகையான ரூபா 2,486,989 பெறவேண்டிய மீதி தொடர்பாக வழக்கிழப்பு ஒதுக்கங்கள் (Impairment Provision) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வங்கிக் கணக்குகளுக்கிடையே நிதியினை மாற்றீடு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட பணம் மாற்றீட்டுக் கணக்கில் (Transfer of Fund Account) 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு பூச்சியப் பெறுமதியாகக் காணப்பட வேண்டிய போதிலும் அத்திகதியில் உள்ளவாறு ரூபா 2,908,878 தொகை செலுத்த வேண்டிய மீதியாகக் காணப்பட்டது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---

7 கணக்கு விடயங்களுக்குரிய 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிக்கும் அதற்குரிய பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 4,657,971,103 வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.5 நிகழத்தக்க பொறுப்புக்கள்

---

கம்பனியினால் 02 கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்க வணிக வங்கியொன்றின் ஊடாக ஐ.அ.டொலர் 80 மில்லியன் கடன் தொகையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதி 02 வருடமும் 06 மாதமும் சலுகைக் காலத்துடன் 15 வருட திறைசேரி பிணைச் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருந்தது. கம்பனியின் இந்த பொறுப்புக்கள் தொடர்பாக திறைசேரிக்கு நிகழத்தக்க பொறுப்பொன்று தோன்றியிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையிலான காலமாகக் காணப்படுகின்ற ரூபா 162,050,121 கூட்டுத்தொகையான 10 கடன்பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த மீதிகள் தொடர்பில் உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் வங்கிக் கணக்கிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் 2009 யூலை மாதம் முதல் காணப்படுகின்ற ரூபா 519,516 தொகையான இனங்காணப்படாத வைப்பொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கம்பனியால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மேலதிகமாக அனுப்பப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 21,549,126 கூட்டுத்தொகையான பொருட்கள், சேவைகள் வரி மற்றும் தேசிய பாதுகாப்பு வரி நியதிச்சட்ட அறவீடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. 15 வருடங்களுக்கு அண்ணளவான காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற அத்தொகையை அறவிடுதல் தொடர்பில் நிச்சயமற்ற நிலை காணப்பட்டது.

(ஈ) 2012 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற செலுத்தவேண்டிய 07 கணக்குகளின் கூட்டுமொத்தமான ரூபா 69,544 வரவு மீதி மற்றும் ரூபா 4,355,641 கூட்டுத்தொகையான செலவு மீதி என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டது.

(உ) வெளிநாட்டு வியாபாரக் கடன்கொடுத்தோருக்கும் வெளிநாட்டு முகவர்களுக்கும் செலுத்த வேண்டிய ரூபா 601,949,080 கூட்டுத்தொகையான 06 மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்காக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு புதிய கப்பல்களின் ஆரம்ப வேலைகளைத் தொடங்குவதற்காக 2014 செப்தெம்பர் 01 முதல் 13 ஆந் திகதி வரை வெளிநாடொன்றில் நடைபெற்ற விழாவிற்கு (Steal Cutting Ceremony) பங்குபற்றிய கம்பனியில் இல்லாத மூன்று உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பிரயாணச் செலவினங்களுக்காகவும் விமானப் பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 1,256,119 தொகை கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய பீடீஎப் 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியின் தலைவருக்கும் நிறைவேற்று பணிப்பாளருக்கும் செலுத்துவேண்டிய மாதாந்த படி முறையே ரூபா 60,000 மற்றும் ரூபா 45,000 ஆக இருந்த போதிலும், அதற்கு முரணானதாக முறையே ரூபா 85,000 மற்றும் ரூபா 75,000 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது கம்பனியால் தலைவருக்கும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கும் முறையே ரூபா 100,000 மற்றும் ரூபா 50,000 மாதாந்தம் ஆகக் கூடியதன் கீழ் கடன் பத்திரப்படி (Credit Card Allowance) அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது, கடன் பத்திரத்திற்காக கம்பனியால் ரூபா 774,048 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

-----------------------

### 3.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மிகை ரூபா 124,942,025 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 250,477,673 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 125,535,648 இனால் அதாவது 50 சதவீதத்தால் வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. மொத்த இலாபம் ரூபா 198,576,852 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஏனைய வருமானம் ரூபா 120,234,383 இனால் குறைவடைந்தமை மற்றும் நிர்வாகச் செலவினமும் வரிச் செலவினமும் முறையே ரூபா 137,155,480 இனாலும் ரூபா 56,321,280 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2010/11 கணக்காண்டு முதல் 2013/14 கணக்காண்டு வரை நிதி விளைவுகள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், 2013/14 கணக்காண்டுடன் ஒப்பிடும்போது 2014/15 கணக்காண்டின் நிதி விளைவுகள் 50 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2010/11 கணக்காண்டில் ரூபா 117,415,000 தொகையான பங்களிப்பு 2014/15 கணக்காண்டின் போது ரூபா 485,953,000 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாட்டு வருமானத்தில் அதிகரிப்பொன்றைக் காண்பித்த போதிலும் மீளாய்வாண்டில் கப்பல் வருமானம் (Voyage Income) 23 சதவீதத்தினால் குறைவையும் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கப்பல் வருமானம் (Charter Hire Income) 100 சதவீதத்தினால் குறைவையும் ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்காக மீளாய்வாண்டின் போது 1,859,738 மெட்ரிக் தொன் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் நிலக்கரி கப்பல் போக்குவரத்து வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 54 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) கம்பனியின் நிர்வாகச் செலவினங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 71 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்பட்ட கடன்பட்டோர் மீதிக்காக ஐயக்கடன் ஒதுக்கங்கள் மேற்கொள்ளல் இச் செலவினங்கள் அதிகரிப்பது தொடர்பில் முதன்மையாகத் தாக்கமளித்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பொருண்மையான விகிதங்களும் சதவீதமும் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **2014/15 கணக்காண்டு** | **2013/14 கணக்காண்டு** |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் சதவீதமாக | 78 | 55 |
| தேறிய இலாப விகிதம் சதவீதமாக | 39 | 59 |
| ஈடுபடுத்திய மூலதன நலன்கள் சதவீதமாக | 3 | 21 |
| கடன் சேகரித்தல் காலம் - நாட்கள் | 684 | 884 |
| கடன் தீர்த்தல் காலம் - நாட்கள் | 1922 | 1222 |
| நீண்டகால கடன் மூலதனமாக்கல் விகிதம் | 0.69 | 0.0019 |
| உரிமை மூலதனத்தில் கடன் விகிதம் | 3.66 | 0.0034 |

i. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதம் 41 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் கப்பல் செயற்பாடுகளுக்காக ஏற்படும் நேரில் செலவினங்களில் குறைவும், நிலக்கரி போக்குவரத்து வருமானம் மற்றும் தரையிறக்கல் வருமானம் உயர்வடைந்து சென்றமையும் இதற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

ii. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் தேறிய இலாப விகிதம் 34 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் வியாபாரக் கடன்பட்டோர் தொடர்பாக ரூபா 138.8 மில்லியனுக்கு நட்டக்கழிவு ஏற்பாடு (Impairment Provision) மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக

நிர்வாகச் செலவினத்தில் ஏற்பட்டிருந்த அதிகரிப்பு இதற்கு காரணமாக இருந்தது.

iii. இந்தக் கம்பனியால் இரண்டு கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,862 மில்லியன் கடன் பெறப்பட்டமையின் காரணமாக உரிமை மூலதனத்தின் அடிப்படையிலான கடன் விகிதம் மற்றும் மொத்த சொத்துக்களின் அடிப்படையிலான கடன் விகிதத்திலும் அதிகரிப்பைக் காண்பித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 4.1 செயலாற்றல்

----------------------------

லங்கா கப்பல் கூட்டுத்தாபனத்தின் அகவிதிப்பத்திரத்தின் பிரகாரம் கம்பனியின் அடிப்படை நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

* கப்பல் உரிமையாளர், பிரயாணிகள் மற்றும் சரக்குக் கப்பல் செயற்பாட்டாளர், தரகரொருவர், முகவர், முகாமையாளர் ஆலோசனையாளர், காப்புறுதி மற்றும் பொதுத் தரகர், போக்குவரத்திற்கு மற்றும் கப்பல் பொருள் விடுதித்தல் மற்றும் அனுப்புபவர் ஒருவராக உள்நாட்டு மற்றும் சர்வதேச வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

* கப்பல் மற்றும் வீதிப் போக்குரவத்து சேவைகளை ஏற்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நடாத்திச் செல்லல்.

* கப்பல் அல்லது ஏனைய கப்பல்கள் அல்லது பல்லூடக அல்லது ஏனைய போக்குவரத்து ஊடகங்களைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், வாடகைக்குப் பெறல், கட்டியெழுப்புதல் அல்லது ஏனைய முறைகளில் கைப்பற்றுதல் மற்றும் ஆழமான கடலில் அல்லது ஆறுகளில், கால்வாய்கள் அல்லது குடாவினை அண்மித்துள்ள உலர் இருப்புக்கள், மரங்கள் மற்றும் வாயுரீதியான பொருட்களைப் போக்குவரத்துச் செய்தல்.

* சுற்றுலா பிரதிநிதியொருவர் மற்றும் ஒப்பந்தகாராக வியாபாரம் செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு அல்லது பிரயாணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக மேம்படுத்துதல்.

* கப்பல் மற்றும் ஏனைய பல்லூடக போக்குவரத்து செயற்பாடுகள் தொடர்பாக வியாபாரங்களில் ஈடுபடும் எந்தவொரு நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கு அல்லது கம்பனியொன்றின் முகவராக, முகாமையின் முகவராக, தரகராக செயற்படுதல்.

* உலகில் எந்தவொரு துறைமுகத்திற்கும் அல்லது பிரயாண இடம் வரை பிரயாணம் செய்வதற்கு கப்பல் வகுப்பொன்றை உருவாக்கல் மற்றும் செயற்படுதல் அல்லது கப்பிலிடல் அல்லது ஏனைய பல்லூடாக போக்குவரத்து ஊடகமொன்றை ஏற்படுத்தி அனுமதிப் பத்திரம் அல்லது இணக்கப்பாட்டை வழங்குதல்.

* பிரயாணிகளுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் நிர்த்தேக்கங்களில் களியாட்ட வசதிகளை வழங்குதல் மற்றும் அதனை அண்மித்த சேவைகளை வழங்குதல் தொடர்பான வியாபாரங்கள்.

(அ) கம்பனியின் அடிப்படை நோக்கங்களில் சில நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குறைவாகக் கவனம் செலுத்தப்பட்டிருந்த நோக்கங்கள் சுருக்கமாக கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) கப்பல், விமானம் மற்றும் வீதி என்பவற்றுடன் இணைந்ததாக போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்துதல், பராமரித்தல் மற்றும் பேணிச் செல்லல்.

(ii) பல்லூடக போக்குவரத்து முறைகளைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், வாடகைக்குப் பெறல், குத்தகைக்குப் பெறல், நிர்மாணித்தல் அல்லது வேறு முறைமையொன்றில் கைப்பற்றுதல் மற்றும் எந்தவொரு வகையொன்றில் பொருட்களைப் போக்குவரத்தில் ஈடுபடுத்துதல்.

(iii) சுற்றுலா பிரதிநிதியாக மற்றும் ஒப்பந்தக்காரராக வியாபாரம் செய்தல், சுற்றுலாவில் உள்ளோருக்கு அல்லது பிரயாணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக மேம்படுத்தலுடன் தொடர்பான வியாபார நடவடிக்கைகள்.

(iv) பிரயாணிகளுக்கும் சுற்றுலாவிலுள்ளோருக்கும் நீர்த் தேக்கங்களில் களியாட்ட வசதிகளை வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை வழங்குதல் தொடர்பான வியாபார நடவடிக்கைகள்.

(ஆ) இந்த நோக்கங்களின் பிரகாரம் கம்பனியின் செயற்பொறுப்புக்கள் கடல் போக்குவரத்திற்கும் கப்பல் சரக்குகளைக் கையாளல் மற்றும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகள் தொடர்பில் பரந்த அளவில் பரவியுள்ள போதிலும், மீளாய்வாண்டின் போது கம்பனியின் மொத்த உழைப்பில் அண்ணளவாக 62 சதவீதமான அளவொன்று அரச கம்பனியொன்றிற்கு நிலக்கரி போக்குவரத்துச் சேவை வழங்குதல் மூலம் உழைக்கப்பட்டிருந்தது.

**4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கப்பற் துறையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் 100 பயிலுனர் மாலுமிகளுக்காக செயன்முறைப் பயிற்சியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 35 பேர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டதன் மூலம் உரிய இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) I. கிரயத்தின் அடிப்படையிலான கப்பற் கட்டணம் நாட்டிற்குத் தேவையான நிலக்கரி மற்றும் மசகு எண்ணெய் போக்குவரத்துச் செய்வதற்கு கூட்டுத்தாபனம் மாத்திரம் உரித்தாக்கிக் கொள்வதற்கு 2014 யூன் 19 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 நவம்பர் 07 ஆந் திகதி முதல் 2015 சனவரி 04 வரையான காலத்தில் 258,539 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் மாத்திரம் அரசாங்க கூட்டுத்தாபனமொன்றிற்கு போக்குவரத்துச் செய்யப்பட்டிருந்தது.

II. 2015 ஆம் ஆண்டில் அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றிற்காக 1,710,000 மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் போக்குவரத்துச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் போது 2015 சனவரி மாதத்தின் பின்னர் மசகு எண்ணெய் போக்குவரத்து நடவடிக்கைகள் முழுமையாகக் கைவிடப்பட்டமையினால் அரசாங்க கூட்டுத்தாபனம் வெளிநாட்டுக்

கம்பனிகள் மூலம் போக்குவரத்து நவடிக்கைகள் மேற்கொண்டு மீளாய்வாண்டின் போது 1,772,676 மெட்ரிக் தொன் அளவில் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டமையினால் முன்னைய அமைச்சரவைத் தீர்மானத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனியைப் போலவே அரசாங்கத்திற்கு உழைப்பதற்கு முடியுமாக இருந்த பாரியளவிலான வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.

(இ) 2005 மே 06 ஆந் திகதிய 415 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களிலும் இறக்குமதி நடவடிக்கைகள் கம்பனி ஊடாக மேற்கெள்ளப்பட வேண்டியமை சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க சந்தை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------------

முறையான அங்கீகாரமின்றி வரிசை அமைச்சிற்குரிய பத்திரிகை அறிவித்தலை பிரசுரிப்பதற்காக 2014 திசெம்பர் 14 ஆந் திகதி கம்பனியால் ரூபா 2,413,320 தொகை அவ்வமைச்சிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 பதவியணியின் நிர்வாகம்**

-----------------------------------------------

கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 132 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 115 ஆகவும் இருந்தமையால் மிகை மற்றும் வெற்றிட பதவிகளின் எண்ணிக்கை முறையே 06 மற்றும் 17 ஆக இருந்ததுடன் 2016 செப்தெம்பர் வரையிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

--------------------------------------------------------------

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள்

நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2016 சனவரி 12 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வரைவு ஆண்டறிக்கை 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதும், அதற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் தவிர மேலும் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார். அதன் காரணமாக வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போதியளவில் அமுல்படுத்த முடியாதிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- | --- |
| (அ) | நிதிக்கட்டுப்பாடு | வங்கிக் இணக்கக் கூற்றில் சில வருடங்களாக பேணப்படுகின்ற இனங்காணப்படாத வைப்புக்கள், செல்லுபடிக் காலத்தை விஞ்சிய சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் காணப்பட்டமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொதுக் கட்டுப்பாடு | கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு மென்பொருள் (IFS) கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் இதுவரை அந்த வழங்குனரினால் பராமரிக்கப்படாமை, நாளதுவரையாக்கப்படாமை, பராமரிப்பு உடன்படிக்கையின்மை மற்றும் இந்த கணக்கீட்டு மென்பொருள், கம்பனியின் தற்போதைய தேவைகளுடன் இணங்காமை. |
| (இ) | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடுகளில் நலிவுகள் காணப்பட்டமை. |